www.StudyGuideIndia.com

**5072**

Register Number | | | | | |

**Part III**

# வணிகவியல் / COMMERCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

*குறிப்பு :* அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 40 × 1 = 40

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக :

1. ஒரு குடும்பத்தில் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுவது

அ) தனி வணிகம் ஆ) இந்து கூட்டு குடும்ப வணிகம்

இ) கூட்டுறவு சங்கம் ஈ) கூட்டாண்மை.

2. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்முறை அமைப்பு

அ) அரசு நிறுமம் ஆ) பொதுக்கூட்டுரு

இ) துறைமுறை அமைப்பு ஈ) வாரிய அமைப்பு.

3. தனியாள் வணிகரின் பொறுப்பு

அ) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது

ஆ) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது

இ) வரையறையில்லாதது.

4. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை

அ) முதல்வர் மற்றும் முகவர்

ஆ) உரிமையர் மற்றும் வேலையாளர்

இ) எஜமானர் மற்றும் பணியாளர்.

[ Turn over

5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது

அ) ஒப்பந்தத்தால்

ஆ) கூட்டாளிகளிடையே உறவு

இ) அரசின் வழிகாட்டல்.

6. தன் பெயரை மட்டும் வியாபாரத்தில் பயன்படுத்த அனுமதிக்கும் கூட்டாளி

அ) உழையா கூட்டாளி அல்லது உறங்கும் கூட்டாளி

ஆ) பெயரளவு கூட்டாளி அல்லது பாசாங்கு கூட்டாளி

இ) முரண் தடைக் கூட்டாளி.

7. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை-A ( Table - A )

அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி

ஆ) இருப்புநிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்

இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி

ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி.

8. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநில சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?

அ) பட்டய ( சாசன ) நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம்

இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்.

9. முன்னுரிமைப் பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது

அ) பங்காதாயம் பெறுவதில் மட்டும்

ஆ) நிறுமம் கலைப்பிற்குள்ளாகி முதல் தொகையை திருப்பித் தரும்பொழுது மட்டும்

இ) வாக்குரிமையைச் செலுத்துவதில்

ஈ) பங்காதாயம் பெறுவதிலும் நிறுமம் கலைப்பின் போது பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்.

www.StudyGuideIndia.com

10. பங்குகளை ஒறுப்பிழப்பு ( பறிமுதல் ) செய்யக் காரணம்

அ) நிறுமத்திற்குச் செலுத்த வேண்டிய கடன்தொகையை செலுத்த மறுத்தல்

ஆ) தொடர்ந்து நிறுமத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் மூன்று முறை கலந்து கொள்ளாமல் இருப்பது

இ) அழைப்பு பணத்தைச் செலுத்தத் தவறுவது

ஈ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல்.

11. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவற்றுள் எந்நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்பட மாட்டாது ?

அ) தணிக்கையர் நியமனம்

ஆ) கடனீட்டுப் பத்திர வெளியீடு

இ) பதவி விலகுமிடத்திற்கு இயக்குநர்களை நியமித்தல்

ஈ) பங்காதாயம் விளம்பப்படல்.

12. ஒரு நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள், நியமிக்கப்படுவது

அ) சட்டமுறைக் கூட்டத்தில் உறுப்பினர்களால்

ஆ) முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களால்

இ) நிறுமச் செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிடப்படுவதால்

ஈ) நிறுமப் பதிவாளரால்.

13. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை

அ) பொது விடுப்புகள் ஆ) விற்பனைக்கான தருமொழி

இ) மேலாண்மைத் தரகர்கள் ஈ) ஒப்புறுதியளித்தல்.

14. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர்

அ) கலைமான் ஆ) கரடி

இ) காளை ஈ) முட வாத்து.

www.StudyGuideIndia.com

15. சபைத் தலைவருடன் சேர்ந்து செபியில் ( SEBI ) எவ்வளவு உறுப்பினர்கள் உள்ளனர் ?

அ) 5 ஆ) 7

இ) 6 ஈ) 8.

16. கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களின் பங்குகள்

அ) மாற்ற முடியும் ஆ) திருப்பி செலுத்தக் கூடியது

இ) திருப்பி செலுத்த முடியாதது ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

17. கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களின் உச்ச அளவு

அ) 50 ஆ) 60

இ) 100 ஈ) வரையறை இல்லை.

18. முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு

அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா

இ) சுவிட்சர்லாந்து ஈ) இந்தியா.

19. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாக கருதப்படும் வடிவமைப்பு

அ) துறைவாரி அமைப்பாகும் ஆ) பொதுக் கழகமாகும்

இ) அரசு நிறுமமாகும் ஈ) கூட்டுப் பங்கு நிறுமமாகும்.

20. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்

அ) பொதுக் கழகம் ஆ) துறைவாரி அமைப்பு

இ) அரசு நிறுமம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

www.StudyGuideIndia.com

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. வேலை பகிர்வு முறை என்பது .....................

22. தனியாள் வணிகத்தில் முடிவுகள் ..................... எடுக்கப்படுகின்றன.

23. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாப-நட்டம் ..................... பகிர்ந்தளிக்கப்படுகிறது.

24. ஒரு கூட்டாண்மை அமைப்பில் ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரும் ..................... என அழைக்கப்படுகின்றனர்.

25. ..................... வணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதுமில்லை.

26. இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்கட்கு உள்ள கால இடைவெளி ..................... மாதங்களுக்கு மிகக்கூடாது.

27. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான ..................... .

28. பொதுவாக தணிக்கையர் ..................... கூட்டத்தில் நியமிக்கப்பட்டு ஊதியமும் நிர்ணயிக்கப்படும்.

29. பங்குகள் ஒதுக்கீடு செய்தபின், ஒதுக்கீட்டாளர் நிறுமத்தின் ..................... ஆகிறார்.

30. ..................... புதிய பங்குகளை வெளியிட இடைத்தரகர்களாக செயல்படுகின்றன.

31. இந்தியாவில் ..................... பிராந்திய ( Regional ) பங்கு மாற்றகங்கள் உள்ளன.

32. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ..................... .

33. பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினருடைய பொறுப்பு .....................

34. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் ..................... என அழைக்கப்படுகின்றன.

35. தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது ..................... இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.



www.StudyGuideIndia.com

36. அரசு நிறுமத்தில் குறைந்த பட்சம் ...................... பங்குகளை அரசு எடுத்து வைத்திருக்கும்.

37. ...................... கலைப்பு என்பது அனைத்து கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவு முறிந்து விடுதலாகும்.

38. வங்கித் தொழில் அல்லாத பிற தொழிலுக்கு அதிக பட்ச உறுப்பினரின் எண்ணிக்கை ...................... .

39. பங்குநர் ஒருவர்க்குப் பதிலாகக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியமிக்கப்படும் நபர் ...................... என அழைக்கப் பெறுகிறார்.

40. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது ......................

## பகுதி - ஆ

குறிப்புகள் : i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 4 *வரிகளுக்கு* மிகாமல் விடையளிக்க.

$10 \times 4 = 40$

41. தர வரிசை முறைக் கோட்பாடு என்றால் என்ன ?

42. பன்னாட்டு நிறுமத்தின் ஏதேனும் நான்கு எடுத்துக்காட்டுகளைத் தருக.

43. தனியாள் வணிக அமைப்பு என்றால் என்ன ?

44. கூட்டாளிகளின் கூட்டு மற்றும் தனி பொறுப்பு என்றால் என்ன ?

45. உழையா கூட்டாளி என்பவர் யார் ?

46. பங்கு முனைமம் ( Premium ) என்றால் என்ன ?

47. அயல்நாட்டு நிறுமம் என்பதன் பொருள் யாது ?

48. ஆண்டுப் பொதுக்கூட்டம் குறித்து சிறு குறிப்பு வரைக.

www.StudyGuideIndia.com

49. நிகழ்ச்சிக் குறிப்பு ( Minutes ) என்றால் என்ன ?

50. பத்திரம் என்றால் என்ன ?

51. பட்டியலிடுதல் என்றால் என்ன ?

52. கூட்டுறவு அமைப்பு - வரையறு.

53. ஒரு நபர் ஒரு வாக்கு என்பதன் பொருள் யாது ?

54. பொதுக் கழகத்தின் மேலாண்மை பற்றிக் குறிப்பிடுக.

55. அரசு நிறுமம் - வரையறு.

## பகுதி - இ

*குறிப்புகள் :* i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொன்றிற்கும் *ஒரு பக்க* அளவிற்கு மிகாது விடையளி. $5 \times 8 = 40$

56. இந்து கூட்டுக்குடும்ப வணிகம் பற்றி குறிப்பு வரைக.

57. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது ?

58. பங்குகளை வட்டத்தில் வெளியிட உள்ள நிபந்தனைகளை விளக்குக.

59. மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் பற்றி விளக்கிக் கூறுக.

60. ஊக வணிகர்களின் வகைகளை விவரி.

61. ஒரு பொதுவரையறை நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர் ?

62. கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் எட்டு குறைபாடுகளை விவரிக்க.

63. பொதுத்துறைக்கும், தனியார் துறைக்குமுள்ள வேறுபாடுகளை வரைக.

[ Turn over

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

*குறிப்புகள் :* i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொன்றிற்கும் *இரண்டு பக்க* அளவிற்கு மிகாது விடையளி.

4 × 20 = 80

64. அமைப்பின் ஏதேனும் பத்து கோட்பாடுகளை சுருக்கமாக விவரி.

*அல்லது*

துறைவாரி அமைப்பின் இயல்புகள், நிறை குறைகளை விவரி.

65. தனிநபர் வணிகத்தின் ஏதேனும் பத்து குணாதிசயங்களை விவரி.

*அல்லது*

பங்கு மாற்றகம் - வரைவிலக்கணம் எழுதுக. பங்கு மாற்றகத்தின் இயல்புகள் மற்றும் பணிகளை விளக்குக.

66. கூட்டாண்மையின் சிறப்புக் கூறுகளை விவரி.

*அல்லது*

ஒரு நிறுமச் செயலரின் பணிகளும், கடமைகளும் யாது ?

67. பங்குகட்கும் கடனீட்டுப் பத்திரங்கட்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

*அல்லது*

கூட்டுறவு அமைப்பின் ஏதேனும் பத்து சிறப்பியல்புகளை விவரி.

www.StudyGuideIndia.com